இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்றைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 - 2023 /2024
மட்டம் 5
சுற்றாடல் சட்டம் - LLU 5811
காலம் - ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 07.11.2024 நேரம் : பி.ப. 01.30 - பி.ப. 02.30

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.
சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.

1. பேர்ள் எனும் நாட்டின் மக்ககளின் உரிமைகளிற்காக பணியாற்றும் அரசசார்பற்ற தாபனம் போரம் போ கிராஸ் ரூட்ஸ் (Forum for Grassroot) ஆகும். பின்வருவது போரம் போ கிராஸ் ரூட்ஸின் உண்மையறியும் அறிக்கையின் ஒரு பகுதி ஆகும்:

2022 இல் பேர்ள் ஒரு மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. ஒரு விவசாய நாடாக அறியப்பட்டாலும், பேர்ள் உணவுகளை இறக்குமதி செய்வதில் அதிகமாக தங்கியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் 2023 இன் ஆரம்பத்தில் நாட்டின் கிழக்குப் பிராந்தியத்தின் பக்கரைப்பற்று எனும் கிராமத்தின் 100,000 ஏக்கர் காணியில் கரும்பு பயிர்ச்செய்கைக்காக ஒரு அரசு - தனியார் பங்குடைமையை X சுகர் கேன் பிரைவட் லிமிடட் ( X Sugar Cane (pvt) ltd) ஆரம்பித்தது. பங்குடைமை ஒப்பந்தத்தின் பிரகாரம் 51% சொத்துவம் அரசிடம் இருந்த அதே வேளை 49 % சொத்துவம் X சுகர் கேன் (பிரைவட்) லிமிட்டிடம் இருந்தது. 2023 இன் மத்தியில் இருந்து X சுகர் கேன் (பிரைவட்) லிமிடட் ஏற்றுமதி தேவைகளுக்காக போத்தலில் அடைக்கப்பட்ட கரும்பு பானங்களை உற்பத்திசெய்தது. இதனை மேற்கொள்வதற்கு கம்பனியானது கிராமத்தின் நீர் நிலைகளில் இருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு உரிமத்தைப் (license) பெறுகிறது.

கடந்த மாதம் பக்கரைப்பற்றின் கிராம வாசிகள் அவர்களின் கிணறுகள் வறண்டு போனதாகவும் அவர்கள் வீட்டு வேலைகளையோ அல்லது விவசாய வேலைகளையோ மேற்கொள்வதற்கு நீர் இல்லையென முறையிட்டு பல போராட்டங்களை ஆரம்பித்தனர். மேலும் இவர்கள் தமது கிராமத்திற்கும் கரும்புத் தோட்ட பயிர்ச் செய்கைக்கும் இடையிலான ஆறு மாசடைந்துள்ளதுடன், மீன்கள் இறப்பதாக முறையிட்டனர். இம் முறையீடுகளிற்கான விஞ்ஞானபூர்வமானதும் , மருத்துவ ரீதியானதுமான சான்றை மனித உரிமைகளிற்கான ஆர்வலர்கள் முன்வைத்தனர். கிராம விவசாயிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலம்பெருதல் மூலம் வேறு தொழில்களை தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பல விவசாயிகள் வங்கிகளிடம் இருந்து கடன்களைப் பெற்றதுடன், பலர் விவசாய செலவுகளை செய்வதற்காக தமது நகைகளை அடகும் வைத்திருந்தனர். கடந்த நான்கு மாதங்களில் நான்கு விவசாயிகள் தற்கொலை செய்திருந்தனர்.

பேர்ளின் சட்ட முறைமை இலங்கையை ஒத்தது எனக் கருதி, பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. உமது விடையில் இலங்கையில் இருந்தும் பிற நியாயாதிக்களில் இருந்தும் தீர்ப்புச் சட்டங்களை உள்ளடக்க வேண்டும்.

(அ)கிராமத்தின் ஒரு அரச சார்பற்ற தாபனம் ஆனது , கரும்பு பயிர்ச் செய்கையை தொடருவதன் மூலமாக அரசானது சுற்றாடற் சட்டம் சார்ந்த கோட்பாடுகளை மீறுகிறது என வழக்கிட விரும்புகிறது. பொருத்தமான கோட்பாடுகளை இனங்கண்டு அவை, எவ்வாறு இவ் வாதத்தை நிறுவுகிறது என ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ)கிராமத்தின் ஒரு ஆசிரியர் பாடசாலை தனது 7 வயதுடைய மகளின் சார்பில் அவளது ஆரோக்கியம் மிக்க சூழல் மற்றும் ஆரோக்கியம் என்பவற்றுற்கான உரிமையின் மீது வழக்கிட விரும்புகிறார். இவர் ஒரு வலிதான வாதத்தை முன்வைக்க இயலுமா என ஆராய்க?

(10 புள்ளிகள்)

உமது விடையானது பொருததமான நியதிச் சட்ட உறுப்புரைகளையும், இலங்கையினதும் பிற நியாயாதிக்கங்களினதும் தீர்ப்புச் சட்டங்களையும் உள்ளடங்க வேண்டும்.

பதிப்புரிமை பெற்றது